**தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியிலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தில் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னையஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் 06 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வழிகாட்டல்கள் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்று திறைசேரியின் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் முற்பணங்கள் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ரூபா 211,450 திறைசேரி புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விட குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்த ரூபா 211,450 பெறுமதி எனதால் ஏற்பட்டது என்பதை அடையாளம் காணப்பட்டிருப்பதுடன் இந்த வேறுபாட்டை சரி செய்வதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தினால் பெறப்படுகின்ற அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது இது சரிசெய்யப்படும். | வழிகாட்டலின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே முற்பணங்கள் அறவீடுகள் ரூபா 1,625,100 முதலீட்டுச் செயற்பாட்டின் மூலம் ஏற்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிலே முற்பணங்கள் அறவீடுகள் ரூபா 1,625,100 அலுவலக புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும்,அந்தப் பெறுமதி முதலீட்டுச் செயற்பாட்டின் மூலம் ஏற்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கட்டு நிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கட்டுநிதிக் கணக்கில் காட்டப்பட்டுள்ள ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 106,110 நிதிச் செயலாற்றல் கூற்றில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதிக் கணக்கு மற்றும் திறைசேரியினால் வெளியிடப்பட்ட SA-70 கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாட்டை திறைசேரியுடன் சேர்ந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் திறைசேரியின் | முன்னைய வருடத்தில் செலுத்தப்பட வேண்டி இருந்த ரூபா 307,521 தொகை கணக்குகள் தீர்க்கப்படும் சந்தர்ப்பத்திலே முன் வைக்கப்படாததுடன், கட்டாயமான செலுத்துதல் | சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் சரியாக அடையாளங் காணப்பட்டு நிதிக் கூற்றுக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாத இருப்பினும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் ரூபா 307,521 தொகை 2021 ஆம் ஆண்டிலே தீர்க்கப்பட்டிருந்தது. | என்பதுடன் 2021 ஆம் ஆண்டிலே ஏற்பாட்டை பயன்படுத்தி தீர்க்கப்பட்டது. | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாண் 94(2) இன் பிரகாரம் விநியோகங்கள் மற்றும் சேவை தொடர்பாக வருடாந்தம் மீண்டெழுபவைகளான ரூபா 475,407 ஆன பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் சரியாக அடையாளங் காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 வங்கிக் கணக்குகள் செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கி கணக்குகள் தொடர்பாக நிதி அறிக்கையின் படி வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விட அதிக காலத்தினைக் கொண்ட ரூபா 38,375 பெறுமதியான 02 காசோலைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காசோலைகள் தொடர்பாக எதிர்காலத்தில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக | நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் கீழ் சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

#### 3.1.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந்திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் வருடாந்த செயல் நடவடிக்கைக்கான கட்டுநிதி தேவைப்பாட்டின் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி தேவைப்பாட்டின் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. நடப்பு வருடத்திலிருந்து அதை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதாக | சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

#### 3.1.2 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந்திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றத்தை நடப்பு வருடத்தில் இருந்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதாக | சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடத்திற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 04. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 103 மற்றும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 98 ஆக காணப்பட்ட போது, 05 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் இருவர் சிரேஷ்ட மட்டத்திலானா உத்தியோகத்தர்களாவார் | மறுமொழி வழங்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியவசியமாக காணப்படுகின்ற வெற்றிடங்களை பூரணப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |